**சப்ரகமுவ மாகாணக் கல்வித் திணைக்களம்**

**விடுமுறைக்கால சுயகற்றல் செயலட்டை**

**ஆக்கம் - நிவிதிகல கல்வி வலயம்**

**தமிழ் – தரம் 9**

**காலம் :** 2021.06.07 **தொடக்கம்** 2021.06.13 **வரை**

**திங்கட்கிழமை** (2021.06.07 - தங்கள் அப்பியாசக் கொப்பியில் எழுதி செய்யவும்.)

***பாடநூலில் "எறும்பு குடும்பம்" பாடத்தை ஆதாரமாகக் கொண்டு சரி பிழை இடுக***

எறும்பினங்கள் சுறுசுறுப்பான பூச்சியினமாகும். ( )
உழைப்பாளிகளிலே வேலைக்கார எறும்புகள் என்ற உட்பிரிவுகளும் உண்டு. ( )
எறும்புகள் தங்களுக்குள் சிறு குழுக்களை ஏற்படுத்தி அரசாளுகின்றன. ( )
வேலைக்கார எறும்புகளுக்கு படை வீரர்களான எறும்புகள் புற்றுக்கள் அமைக்க உதவுகின்றன. ( )
எறும்பின் கண்கள் பல விழித்திறை களைக் கொண்டுள்ளன. ( )

**செவ்வாய்க்கிழமை** (2021.06.08 - தங்கள் அப்பியாசக் கொப்பியில் எழுதி செய்யவும்.)

பாடத்தை நன்கு வாசித்து **பக்கம் 88** தரப்பட்டுள்ள அரும்பதங்கள் எழுதி, கட்டுரையில் இருக்கின்ற மேலும் 10 அரும்பதங்கள் கண்டறிந்து எழுதுக மேலும் கிரகித்தல் பயிற்சி ஐந்திற்கும் விடையளியுங்கள்.

**புதன்கிழமை** (2021.06.09 - தங்கள் அப்பியாசக் கொப்பியில் எழுதி செய்யவும்.)

இயற்கையாகவே சமூகமாக வாழும் ஒழுங்குமுறை ஒன்றை எறும்புக் கூட்டம் எவ்வகையில் கொண்டு ஒழுகுகின்றன என்பது குறித்த ஓர் உரையாடலை **150** சொற்களுக்கும் ஏற்படாதவாறு எழுதுக.

**வியாழக்கிழமை** (2021.06.10 - தங்கள் அப்பியாசக் கொப்பியில் எழுதி செய்யவும்.)

**பக்கம் 89** இல் உள்ள " **வாக்கிய உறுப்புக்கள்"** என்கின்ற பகுதியை நன்கு வாசித்து, **செயப்படுபொருள் குன்றிய வாக்கியம்** என்றால் என்ன என்பதற்கான வரைவிலக்கணத்தை தந்து, உதாரணம் 5 எழுதுக

**வெள்ளிக்கிழமை** (2021.06.11 - தங்கள் அப்பியாசக் கொப்பியில் எழுதி செய்யவும்.)

**பக்கம் 89, 90** இல் உள்ள **"வாக்கிய உறுப்புக்கள்"** என்கின்ற பகுதிகளை நன்கு வாசித்து செயப்படுபொருள் குன்றா வாக்கியம் என்றால் என்ன என்பதற்கான வரைவிலக்கணத்தை தந்து உதாரணம் 5 தருக

**சனிக்கிழமை** (2021.06.12 - தங்கள் அப்பியாசக் கொப்பியில் எழுதி செய்யவும்.)

**பக்கம் 90** இல் காணப்படும் பயிற்சிகள் இரண்டினையும் பாடநூல் துணைகொண்டு விடை எழுதுக

**ஞாயிற்றுக்கிழமை** (2021.06.13 - தங்கள் அப்பியாசக் கொப்பியில் எழுதி செய்யவும்.)

**பக்கம் 91** இல் உள்ள கலைச்சொற்களை கொப்பியில் பிரதி செய்து கொண்டு பின்னர் அதன் கீழ் உள்ள பயிற்சியில், கலைச் சொற்களைப் பயன்படுத்தி பந்தியை மீள எழுதுக